**<u>தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்</u>**

செய்தி வெளியீடு

செய்தி வெளியீட்டு எண்: 51/2020 நாள்: 22.12.2020

தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் அனைவரும் அவர்களது ஒருமுறைப்பதிவு / நிரந்தரப்பதிவில் (ONE TIME REGISTRATION) கட்டாயமாக தங்களது ஆதார் எண்ணை இணைக்க வேண்டும் என முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் இதுவரை தங்களது ஆதார் எண்ணை பதிவு செய்யாத விண்ணப்பதாரர்கள் விரைவில் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இனிவரும் காலங்களில் தேர்வர்கள் தாங்கள் எழுதவிருக்கும் தேர்வுகளுக்கான தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினைப் பதிவிறக்கம் செய்யும் முன் தங்களது ஆதார் எண்ணைப்பதிவு செய்தால் மட்டுமே நிரந்தரப்பதிவின் மூலமாக பதிவிறக்கம் செய்ய இயலும்.

விண்ணப்பதாரர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஒருமுறைப்பதிவு/ நிரந்தரப்பதிவு வைத்திருக்க அனுமதியில்லை. இருப்பினும் ஏற்கனவே ஒன்றுக்கு மேற்பட்ட ஒருமுறைப்பதிவு / நிரந்தரப்பதிவு வைத்துள்ள விண்ணப்பதாரர்கள், தங்களது ஆதார் எண்ணை தவறுதலாக பதிவுசெய்துள்ளதாக தேர்வாணையத்தைத் தொடர்பு கொண்டு ஏனைய இதர நிரந்தரப் பதிவிற்கு மாற்றம் செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுத்து வருவதனையும், விண்ணப்பதாரர்களின் நலனையும் கருத்தில்கொண்டு, அவர்களது நிரந்தரப்பதில் இணைத்துள்ள ஆதார் பதிவினை **ஒரே ஒருமுறை மட்டுமே** இரத்து செய்து தங்களது விருப்பத்திற்கேற்ப ஏனைய நிரந்தரப்பதிவில் ஆதார் எண்ணை இணைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆகையால், விண்ணப்பதாரர்கள் இவ்வாய்ப்பினை மிகுந்த கவனத்துடன் பயன்படுத்திக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

03.01.2021 அன்று நடைபெறவுள்ள **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு-1 (Group-1)** முதனிலைத்தேர்வு மற்றும் 09.01.2021 & 10.01.2021 அன்று நடைபெறவுள்ள **உதவி இயக்குனர் (தொழில் மற்றும் வணிகம்)** தேர்வுகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்குத் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதனை ஒருமுறைப்பதிவு / நிரந்தரப்பதிவு மூலம் ஆதார் எண்ணை இணைத்த பிறகே பதிவிறக்கம் செய்ய இயலும்.

மேலும் இது குறித்த கூடுதல் விளக்கம் தேவைப்படின், விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்தின் கட்டணமில்லாத் தொலைபேசி எண் 1800 425 1002ல் அலுவலக நேரங்களில் (from 10.00 AM to 5.45 PM) எல்லா வேலை நாட்களில் வரும் 08.01.2021 வரை தொடர்பு கொள்ளவும் மற்றும் தேர்வாணைய மின்னஞ்சல் முகவரியான contacttnpsc@gmail.com மின்னஞ்சல் வாயிலாகவும் தொடர்பு கொண்டு உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தேர்வாணைய செய்தி வெளியீடுகளில் ஏற்கெனவே அறிவித்திருந்தவாரு தேர்வாணையத்தால் இனிவரும் காலங்களில் நடத்தப்படவிருக்கும் கொள்குறிவகைத் தேர்வுகளுக்கு பயன்படுத்தப்படவுள்ள OMR விடைத்தாள் பல சிறப்பம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே, புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள OMR விடைத்தாளின் மாதிரிப் படிவமும், விடைத்தாள் கையாளும் முறை குறித்த விளக்கக் குறும்படமும், தேர்வாணைய இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. தேர்வர்கள் இவ்விடைத்தாளில் இடம்பெற்றுள்ள அறிவுரைகளையும், குறும்படத்தில் இடம்பெற்றுள்ள விளக்கங்களையும் கவனத்துடன் கருத்தில் கொண்டு சரியான முறையில் தேர்வுகளை எதிர்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**ஆர். சுதன், இ.ஆ.ப**
தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்